**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண். 55/2021** **நாள். 21.07.2025**

2025–ம் ஆண்டு ஜுலை திங்கள் 21–ம் நாள் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.1 முருகேசன் த/பெ.புள்ளிக்கவுண்டர்**

**குறுக்குவிசாரணை**

1) நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதியாக சேர்க்கபட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.எண்.78/2023 என்ற வழக்கை மாராயி, வள்ளியம்மாள், பழனியம்மாள் ஆகியோர்கள் மட்டும் தான் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் வம்சாவழி அவர்களுக்கு இருந்த சொத்துக்கள் விபரம் ஆகியவற்றை தெரிந்து தான் மற்ற பிரதிவாதிகளுக்கு சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளிலும் ஒரே சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.78/2023 என்ற வழக்கை தாக்கல் செய்யும் போது நான் தாவா சொத்துக்களின் உரிமைளயாளர் இல்லை என்றால் சரிதான்.

2) அ.வ.எண்.78/2023 வழக்கு தாக்கல் செய்யும் போதே மேற்படி வழக்கின் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.78/2023 வழக்கு பற்றி விபரம் 2019ம் ஆண்டு நான் கிரையம் பெற்ற பின்னர் அ.வ.எண்.123/2020 என்ற வ ழக்கை நான் பரமத்தி உரிமையியல் நீதிமன்றத்தில் stay கேட்ட போது அதில் பதில் தாக்கல் செய்த போது தான் மேற்படி அ.வ.எண்.78/2023 வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும். அ.வ.எண்.123/2020 வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் இவ்வழக்கு O.S.55/2021 வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். தமிழ் எனக்கு படிக்க தெரியும். அ.வ.எண்.55/2021 வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

3) அ.வ.எண். 55/2021 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் இவ்வழக்கின் பிராது 16, 17 பாராக்களில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானது என்று சொல்லியுள்ளேன்ள ன்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் 14.12.2021ம் தேதியில் ஒரு பதிலுரை தாக்கல் செய்து அதற்கு பின்னிட்டு ஒரு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கூடுதல் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் முதலில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிடாத சங்கதிகள் என்றால் சரிதான். 2வது தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மாராயி வம்சாவழியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணமான அ.வ.எண்.123/2020 என்ற வழக்கின் பிராதில் கருமகவுண்டரின் வாரிசுகள் புள்ளிகவுண்டர் மற்றும் சின்னகருமகவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் கருமகவுண்டரின் வாரிசுகள் சின்னகருப்பகவுண்டர், பில்லிக்கவுண்டர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அவ.எண். 34/2021 என்ற வழக்கின் பிராதிலும் கருமகவுண்டரின் வாரிசுகள் புள்ளிகவுண்டர் மற்றும் சின்னகருமகவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளின் பிராதிலும் கருமகவுண்டர் மனைவி வள்ளியம்மாள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) அ.வ.எண்.55/2021 வழக்கு சொத்துக்கள் ஆதியில் சர்வே எண்.14/2ல் 4 ஏக்கர் 64 செண்ட் என்று இருந்தது என்றால் சரிதான். சர்வே எண்.14/2ல் 4 ஏக்கர் 64 செண்ட் பின்னிட்டு 14/2A, 14/2B, 14/2C, 14/2D, 14/2E என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கருமகவுண்டரின் வாரிசுகள் சின்னகருப்பகவுண்டரும், பில்லிகவுண்டரும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா, எழுத்து மூலமாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை செய்து அனுபவம் செய்து வந்த சொத்தை பில்லிகவுண்டரிடமிருந்து வாதியின் தகப்பனார் மாரப்பகவுண்டர் 1962ம் வருடம் கிரையம் பெற்றார். எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது.

5) இவ்வழக்கின் வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்து உள்ளேன்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1960ல் வழங்கப்பட்ட அ பதிவேட்டில் சர்வே எண்.14/2ல் பில்லிக்கவுண்டர், சின்னகருப்பகவுண்டர், மாரப்பகவுண்டர், வள்ளியம்மாள் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 1962ல் பில்லிக்கவுண்டரிடமிருந்து மாரப்பகவுண்டர் 14/2ல் 6ல் 1 பங்கு 78 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் 78 செண்ட் தான் கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் மாரப்பகவுண்டர் கிரையம் வாங்கியதின் அடிப்படையில் 1960 ம் ஆண்டு செட்டில்மெண்ட் பதிவேட்டில் மேற்படி மாரப்பகவுண்டரின் பெயர் கூட்டு பாகஸ்தரராக உள்ளது என்று நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

6) சர்வே எண்.14/2 உட்பிரிவு 14/2B, 14/2E ஆகியவை தற்போது வாதியின் மகன் தியாகராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கான கணிணி சிட்டா என்னிடம் காண்பிக்கப்படுவது தான். **அது வா.சா.ஆ.20 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மாரப்பகவுண்டர் கிரையம் பெற்ற வகையில் அவருக்கு 78 செண்ட் தான் உரிமையானது என்றாலும், ஆனால் வா.சா.ஆ-20 ஆவணத்தில் 1 ஏக்கர் 70 செண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மாரப்பகவுண்டரின் கிரைய பத்திரத்தில் 78செண்ட் என்று எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று தெரியாது. சர்வே எண்.14/2ல் மொத்தம் 4 ஏக்கர் 64 செண்ட்ல் எங்கள் முன்னோர்களுக்கு பாத்தியம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ம் ஆவணத்தில் சர்வே எண்.14/1ல் குப்பண்ணகவுண்டர் என்பது என்னுடைய தாத்தாவாகும். எனது தாத்தா குப்பண்ணகவுண்டரும், மாரப்பகவுண்டர், சின்னாக்கவுண்டர் ஆகியோர்கள் சகோதரர்கள் என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ-1 ஆவணத்தில் சர்வே எண்.14/1 மற்றும் 14/2 ல் குறிப்பிட்டுள்ள நபர்கள் அனைவரும் பங்காளிகள் என்றால் சரிதான். சர்வே எண்.14/1 மற்றும் 14/2 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிலங்களுக்கு சர்வே எண். 14/3 ல் குறிப்பிட்டுள்ள கிணறு பொதுவானது என்றால் சரிதான். சர்வே எண்.14/2 மற்றும் 14/3ல் வள்ளியம்மாள் பெயர் உள்ளது. ஆனால் சர்வே எண்.14/1ல் வள்ளியம்மாள் பெயர் இல்லை என்றால் சரிதான்.

எங்களுடைய பங்காளிகளுக்கு இடையே சர்வே எண்.14/1 மற்றும் 14/2 ஆகிய சொத்துக்கள் பிரிக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமாக கடந்த 1994ம் ஆண்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் சர்வே எண்.14/2A ல் கண்ட 78 செண்ட்யை எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியமான சொத்தை விற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் சர்வே எண்.14/2Aல் 78 செண்ட் தான 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதை தான் அவர்கள் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றாலும், அவர்களுக்கு வேறு சொத்துக்கள் இல்லை என்றாலும் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மொத்தம் 3 சர்வே எண் உட்பிரிவுகளில் சொத்துக்கள் உரிமையானது என்றும் அதில் ஒரு உட்பிரிவு சொத்தை மட்டும் நான் கிரையம் பெற்றேன்.

**(வாதி தரப்பு மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக காலஅவகாசம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.07.21 17:27:22 +0530

Sub Judge,
Paramathy